★ இலங்கை அரசு இன்னும் பாடம் படிக்கவில்லை

# தமிழ் எம்.பி. சாடல்

(கொழும்பு)

1983முதல் நடந்து முடிந்த யுத்தங்களிலிருந்து இலங்கை அரசு பாடம் படிக்காமல் இருப்பதும், தொடர்ந்தும் இந்த யுத்தத்தை நடத்துவதும் நிச்சயமாகப் பெரும் இழப்புக்களையே உருவாக்கும். இதன் மூலம் பிரச்னைக்குத் தீர்வே காணமுடியாது.

இவ்வாறு ஈ.பி.ஆர் எல். எவ். எம்.பி. திரு சுரேஷ் பிரேமச்சந்திரன் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்: யுத்தத்தின் மூலம் இனப் பிரச்னையை வேறு பக்கமாக திசைதிருப்பி சிங்களவர் மத்தி

(4-ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழகங்களுக்கு கூடுதல் அனுமதி

(கொழும்பு)

1993/94 கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படவிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவிருக்கிறது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழக அனுமதிக்கென ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ள எண்ணிக்கையை விட இது கூடுதலாக இருக்கும்.

(3-ம்பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 17 இதழ் 228
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 3 — 10 — 1993

● அரசியல் தீர்வு இல்லையேல்

# இரண்டாயிரம் ஆண்டிற்குமுன் 'தமிழ் ஈழம்' பிரிந்து போகும்

## - முன்னாள் விமானப்படை தளபதி எச்சரிக்கை -

(கொழும்பு)

"வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு அரசியல்தீர்வு காணப்படாது போனால் இரண்டாயிரமாம் ஆண்டிற்கு முன் இலங்கை பிளவுபட்டு 'தமிழீழம்' என்ற நாடு ஒன்று உருவாகும்" என்று முன்னாள் விமானப்படைத்தளபதி ஹரி குணதிலகா பீ. பி. ஸி. சிங்களசேவைக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது: வகுதி சிங்களவர் தற்பொழுது கவி. இந்தக் கருத்துக்களை வடக்கு-கிழக்கும் பிரச்னைக்கு நாட்டில் இருப்பது இனப்பிர நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இராணுவத் தீர்வு ஒருபோதும் ச்னை அல்ல பயங்கரவாதப் நான் கேட்கிறேன் இது சாத்தியமாகமுடியாது. தென் பிரச்னையே என்று கூறுகிறார்

(4-ம் பக்கம் பார்க்க)

★ கட்டைக்காடு - வெற்றிலைக்கேணியில்

## பாரிய கப்பல்கள் மூலம் இராணுவ தளபாடம் இறக்கம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் கட்டைக்காடு— வெற்றிலைக்கேணி இராணுவ முகாமை அண்டிய கடற் பரப்பில் நங்கூரமிட்டு நிற்கும் பாரிய கப்பல்களிலிருந்து 'பாதைப் படகுகள்' மூலம் இராணுவத் தளபாடங்களை இராணுவத்தினர் தரை

யிறக்கி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இக் கப்பல்களுக்குப் பாதுகாப்பாக நிற்கும் கடற்படைப் பீரங்கிப் படகுகள் கடந்த மூன்று நாட்களாக உடுத்துறை வத்திராயன் கிராமங்களை நோக்கி பீரங்கி ஷெல் தாக்குதல்களை நடத்தி வருவதினால் இப்பகுதி மக்கள்

இடம்பெயர்ந்து வருவதாக செய்தியொன்று தெரிவிக்கிறது.

14-ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ வாகன தொடரணி நகர்வு

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காடு - வெற்றிலைக் கேணி இராணுவ முகாம் களிலிருந்து கடந்த வியாழன் வெள்ளிக்கிழமைகளில் இரவு எட்டு மணியளவில் இராணுவ அணி ஒன்று மண்டலாய்,

மாவிலங்கைத்தோட்டம் வழியாக இயக்கச்சி - ஆனையிறவு முகாம்களுக்குச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

பாரிய இராணுவ வாகனங்கள், புல்டோசர்களும் பேரி

(4ம் பக்கம் பார்க்க)

## ஹெலி, ஷெல் தாக்குதலால் விடத்தல்பளையில் இருவர் பலி

(சாவகச்சேரி)

மிருசுவில் விடத்தல்பளைப் பகுதியில் நடத்தப்பட்ட ஹெலிகொப்டர் தாக்குதல் மற்றும் ஷெல் தாக்குதலினால் இளம் பெண் ஒருவரும், சிறு

வன் ஒருவரும் பலியானார்கள் பலர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் பகல் 12-30மணியளவில் புலோப்பளையிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் மிருசுவில் விடத்தல்பளை பகுதியில்

கமலாசினி வித்தியாலய அருகில் விழுந்து வெடித்ததில் பண்டிதர் குடியிருப்பில் வசித்த வேலணையைச் சேர்ந்த திருமதி பூபதி தவராசா (32

(4-ஆம் பக்கம் பார்க்க)

கொடிகாமத்தில்

## ஹெலி தாக்குதலில் பத்து பேர் காயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் சந்தைப் பகுதியில் நேற்று ஹெலி கொப்டர் ஒன்று பகல் 11-45

மணியளவில் நடத்திய 50 கலிபர் தாக்குதலில் பத்துப் பேர் காயமடைந்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

'ஒபரேஷன் யாழ்தேவி'

## கைப்பற்றப்பட்ட இடங்கள் பலப்படுத்தப்படுகிறது?

(கொழும்பு)

"ஒபரேஷன் யாழ்தேவி" இராணுவ நடவடிக்கையின் போது படையினர் கைப்பற்

றிய பகுதிகளான அல்விப்பளை புலோப்பளை பகுதிகளை படையினர் பலப்படுத்தி வருவதாக

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்தம் தொடருமானால் அரசியல் தீர்வு நிர்மூலமாகும்

### - ராவய ஆசிரியர் எச்சரிக்கை -

(லண்டன்)

வடக்கு-கிழக்கு இனப் பிரச்னைக்கு தீர்வுகாண யுத்தத்தை தொடர்ந்து நடாத்துவதாக இருந்தால் அரசியல் தீர்வுக்கான சகல வழிகளையும் அரசு நிர்மூலமாக்குவதாக இருக்கும் என்று 'ராவய' ஆசிரியர் விக்

(2-ம் பக்கம் பார்க்க)

இலங்கை பிரச்னை

## ஐ. நா. பொதுச் சபையில் ஹமீத் பேச்சு

(லண்டன்)

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாணும் முயற்சிகளை அரசாங்கம் ஒருபோதும் கைவிடவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ஏ. ஸி எஸ். ஹமீத் ஐ. நா. பொதுச்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு தொடர்கிறது

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை நீடிக்

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி கடற் பகுதியில் கடற்படைத் தளம்?

(கொழும்பு)

கிளாலிக் கடற்பகுதியைக் கைப்பற்றிவிட்டதாகக் கூறி வரும் இராணுவத்தினர் யாழ்

குடாவில் தொடரவிருக்கும் பாரிய தாக்குதல்களுக்கு உதவுவதற்காக கிளாலியில் கடற்

(4-ம் பக்கம் பார்க்க)

793

## வர்த்தகம் [illegible]

### வைத்தியம்

செங்கண்மாரி, (Hepatitis) குடற்புண், சூதவலி, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, [illegible] வியல், சருமநோய்கள், மாத விடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களின் பிரபலமானவர். சகலவியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி கி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (இ-475)

### தரன் ஸ்ருடியோ

அவசர பாஸ்போட் படங்கள், றபர் சீல், டேற் சீல், கலர் படங்கள், என்லாஜ்மென்ட் படங்கள், புளொக்ஸ் டிசைன்கள், விளம்பர போட், பிளாஸ்டிக் போட், பாடசாலை பாட்ஸ் மற்றும் ஓவிய வேலைகட்கு 189, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஏ-3470)

### O/L Maths

ஆரம்ப அறிவேயில்லாத வர்களுக்கும் இதுவரை சித்தி படையாதவர்களுக்கும் 26 வருட அனுபவமுடைய ஆசிரியரால் 20 நாட்களில் தொடர் 0 மணித்தியாலங்களில் Distinction பெபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுக நாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (சி-497)

### வயிற்றோட்டம் வாந்தி தாகம் தீர

யாழ். பெரியாஸ்பத்திரிக்கு முன் உள்ள எஸ். ரீ. மருந்துச் சாலையில் கிடைக்கும் "மாந்தக் குளிகையை" இருவர்களுக்கும் "கிராணி மாத்திரையை" பெரியவர்களுக்கும் தேனில் கரைத்துக் காலை மாலை 3 வேளைக்குக் குறையாது கொடுத்து அரோட்டுமா நெற்பொரி காய்ச்சின உணவோடு மாதுளம் பழசாறும் பருகிவர சுகமடையலாம். மூலை, சுரம் பேசவியோ சுரம், தடிமன்சுரம், மண்டை வலிக்கு "சுரக்குளிகை" இரண்டு வெந்நீரில் குடிக்கத் தீரும். டாக்டர் கு. சபாரத்தினம், சுழிபுரம். (இ-498)

### தையல் பயிற்சி வகுப்பு

(தாவடி) இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வடமராட்சி கிழக்குப் பிரிவு மூன்றாவது தொகுதி தையல் பயிற்சி வகுப்பினை கடந்த மாதம் 15-ம் திகதி தாளையடியில் ஆரம்பித்துள்ளது. சுமார் ஐம்பது யுவதிகள்வரை இப்பயிற்சி வகுப்பில் பங்குபற்றுகிறார்கள். -163

### கொலரா தடுப்பு சுவரொ[illegible]

(அரியாலை) யாழ் மாவட்டத்தில் வேகமாகப் பரவிவரும் வாந்திபேதி (கொலரா நோயைக் கட்டுப் படுத்துமுகமாக சுகாதாரப் பகுதியினரால் [illegible] மல் தடுக்கும் அறிவுறுத்தும் [illegible] யாழ். நகரில் [illegible] றன.

---

புலோப்பளை வீரச் சமரில் தன்னுயிரை ஈந்த
மாவீரர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்
**எஸ்ரி. மெடிக்கல்ஸ்**
(ஆஸ்பத்திரி முன்)
490 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

புலோப்பளை வீரச்சமரில் தன்னுயிரை ஈந்த
மாவீரர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலி[கள்]
**லிங்கம் கூல்பார்**
வெலிங்டன் சந்தி, யாழ்ப்[பாணம்]

---

புலோப்பளை வீரச் சமரில் தன்னுயிர் ஈர்ந்த
மாவீரர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்
**சண்முகம் தேனீர்க்கடை**
(வண்ணை சிவன்கோவில் முன்பாக)
10 கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

---

புலோப்பளை வீரச் சமரில் தன்னுயிர் ஈர்ந்த
மாவீரர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலி[கள்]
**எரிக் கணேஷ்**
**ERIC GANESH**
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்[பாணம்]

---

புலோப்பளை வீரச் சமரில் தன்னுயிர் ஈர்ந்த
மாவீரர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்
**வேல்முருகன் கபே**
(சைவ உணவகம்)
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.

---

புலோப்பளை வீரச் சமரில் தன்னுயிர் ஈர்ந்த
மாவீரர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்
**கண்ணன் லொட்ஜ்**
(சைவ உணவகம்)
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

---

புலோப்பளை வீரச் சமரில் தன்னுயிர் ஈர்ந்த
மாவீரர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலி[கள்]
**சீமாட்டி**
122, மின்சாரநிலையவீதி, யாழ்ப்[பாணம்]

---

புலோப்பளை வீரச் சமரில் தன்னுயிர் ஈர்ந்த
மாவீரர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்
**சிவன் ஸ்ரோர்ஸ்**
வளாகச் சந்தி, திருநெல்வேலி.

---

புலோப்பளை வீரச் சமரில் தன்னுயிர் ஈர்ந்த
மாவீரர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்
**இராஜேஸ்வரி றேடர்ஸ்**
(அழகு சாதன விற்பனையாளர்)
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

---

புலோப்பளை வீரச் சமரில் தன்னுயிர் ஈர்ந்த
மாவீரர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலி[கள்]
**குறிஞ்சி மெடிக்கல்[ஸ்]**
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்[வேலி]

---

புலோப்பளை வீரச் சமரில் தன்னுயிர் ஈர்ந்த
மாவீரர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்
**உமா ஸ்ரோர்ஸ்**
சிவன்கோவில் முன்பாக
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

---

புலோப்பளை வீரச் சமரில் தன்னுயிர் ஈர்ந்த
மாவீரர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்
**SAJ ஸ்ரீ அமலா ஜுவலர்[ஸ்]**
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

புலோப்பளை வீரச் சமரில் தன்னுயிர் ஈர்ந்த
மாவீரர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்
**நதியா ஜுவல்லறி**
2, கஸ்தூரியார் வீதி,
(ஸ்ரான்லி வீதிச் சந்[தி])
யாழ்ப்பாணம்.

---

### யுத்தம் தொடருமானால்

1-ம் பக்கத் தொடர்ச்சி

டாக்டர் ஐவன் பிபிசிக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது: வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள யுத்தத்தின் நன்மை தீமைகளை மக்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் தோல்வி ஏற்படுமானால் அரசு பெரும் நெருக்கடியை சந்திக்க நேரிடும்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர், பிரேமதாச போன்றோர் இனப் பிரச்னைத் தீர்வில் சில யோசனை [illegible] நிராகரித்தாலும் தமிழ் பிரச்னை இனப் பிரச்னையே என்று ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் புதிய ஜனாதிபதி விஜேதுங்க இவர்களின் கருத்துக்கு முழுமையாக எதிராக இருக்கின்றார் எனக் கூறினார். (ஐ-கி)

---

புலோப்பளை வீரச்சமரில் தன்னுயிரை ஈந்த
மாவீரர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிக[ள்]



Blossoms
**மலரும் மலர்கள்** (வீடியோ புகைப்பட சே[வை])
82 சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்[பாணம்]

# "இந்த யுத்தத்தில் 20,000 மக்களை அழிக்க அரசு கணக்கிட்டுள்ளது"

(யாழ்ப்பாணம்)

"தமிழ் மக்களை அழிப்பதற்கென ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த யுத்தத்தில் இருபதினாயிரம் மக்கள் அழிக்கப்படுவார்கள் என்று இறிலங்கா அரசு கணக்கு போட்டுள்ளது" என செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனி தெரிவித்தார்.

யாழ். வைரவர் தினம்ம. மயில்நேற்று முன்தினம் நடைபெற்ற கடற்கரும்புலி மேஜர் புகழரசனின் 31ம் நாள் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:

'இறிலங்கா படையினர் மட்டுமல்ல சிங்கள தேசமே ஒன்று திரண்டு தற்போதைய யுத்தத்திற்கான ஆயத்தங்களை செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றது தற்போது நடைபெற்றுவரும் போர் நெருக்கடியான உக்கிரமான போராகநடைபெறுகின்றது. போராளிகள் களத்தில் படையினர் அகற்றப்பட்டு புதுப் படையணிகள் களத்திற்கு அனுப்பப்படுகின்றனர் ஆனால் எமது போராளிகள் இந்த மண்ணை நேசிப்பதால் களைப்பை, பசியை ஈடுசெய்து வீராவேசத்துடன் போராடுகிறார்கள்.

இவ்வாறு அவர்கள் போராடும்போது நாம் எமது தேசத்திற்காக என்ன செய்கிறோம் என்பதனை ஒவ்வொருவரும் உணரவேண்டும். போராளிகள் உங்கள் பிள்ளைகள், சகோதரர்கள் எல்லோரும் ஆயுதம் தாங்கவேண்டும் என்று கூறவில்லை. தங்களின் நிலைப்பாட்டிற்கேற்பப் பங்களிப்பைச் செய்ய முன்வர வேண்டும். இதற்கான கடப்பாடு அனைவருக்கும் உண்டு.

அகிலாண்டேஸ்வரி பொறுப்பாளர் திரு மாவி உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றினர்கள். (158-வி)

---

மணிவாசகம்

"தன்னால் ஒன்றை செய்ய முடியாது என்று ஒருவன் எண்ணும் வரை, உண்மையில் அவனால் அதைச் சாதிக்க முடியாமலே போகும்"

– டெனிஸ் டீஸ்டிரேஸர்

---

## நமது நோக்கு

### ஆறுமுகமா? அதற்கும் மேலா?

ஒரே கொள்கையோடு, ஒருமித்த கருத்தோடு அமைச்சரவைத் தீர்மானம் எடுத்து, செயற்பட வேண்டியதே அரசின் கடமை என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும்.

ஆனால், இங்கு நடப்பதென்ன?

"அமைதித் தீர்வோடு வந்துள்ளேன்; விரைவில் யாழ் செல்வேன்!" என்ற நம்பிக்கையூட்டும் செய்தியை வெளியிட்டது அரசின் ஒருமுகமான தொண்டமான் முகம்]

அண்மையில், நாடாளுமன்றத்தில் "அரசின் நோக்கமென்ன?" என்று கேட்டதற்கு, ஒரு புதுமுறுவல்தான் பதிலாகக் கிடைத்ததாம்!

ஆறுதல் தந்த முகம் வாய் திறக்காது பரிதாபமாகி!

"தொண்டமானுடன் யாழ் சென்று அமைதிக்கு வழி காண்பேன்!" என இன்னொரு முகமான மந்திரி மகிவிமராச்சி கூறியிருந்தார்.

பிரதான முகமான பிரதமர் முகமோ வேறு சுருதியில் பேசி வருகிறது.

"அமைதிப் பேச்சுக்கு இன்னும் இடமுண்டு; கதவு திறந்தே இருக்கிறது!" என ஐ. நா. சென்ற வெளிவிவகார அமைச்சர் ஹமீது, வெளிநாடுகளிற் செய்தி கூறிக் கொண்டிருக்கிறார்!

"இது ஒரு பயங்கரவாதப் பிரச்னை!' என இரத்தினச்சுருக்கமாகக் கூறி, கதவை இழுத்துச் சாத்தியடித்துக் கூறியிருக்கிறார் அதிஉத்தமர் டி. பி. விஜயதுங்க அவர்கள்!

இதேவேளை, இராணுவத் தரப்பிலுள்ள முகங்களோ வெவ்வேறான கதைகளைக் கூறுகின்றன.

பயங்கரவாதிகளை அழிப்பதே நோக்கம் என்கிறது ஒரு முகம். புலிகளை அழிப்பதே நோக்கம் என்கிறது இன்னோர் முகம்!

மக்களை மீட்டெடுத்து ஜனநாயகத்தை மலரச் செய்வதே நோக்கம் என்கிறது இன்னோர் முகம்!

பல முகங்கள் பலவாறு கூறி மக்களைக் குழப்பியடித்து, மயங்கச் செய்து, தமது நோக்கத்தை நிறைவேற்றலாம் என்பதே அரசின் உள்நோக்கம் என்பதை மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள்!

அரசின் செயல்கள் பல, மக்களை மயக்கத்திலிருந்து விழிக்கச் செய்கின்றன. விழிப்படைந்த மக்கள் மீண்டும் அடிமைகளாகி விடமாட்டார்கள் என்பதே வரலாறு!

---

### பல்கலைக்கழகங்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைக் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளும் வகையில் அனுமதிக்குத் தேவையான 'வெட்டுப் புள்ளி எண்ணிக்கையும் குறைக்கப்படவிருக்கிறது.

பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை எந்தச் சூழ்நிலைகளிலும் குறைக்கப்படமாட்டாது.

அவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்பது தான் உயர் கல்வி அமைச்சின் கொள்கையாகும் என அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைக் கூடுதலாக சேர்த்துக் கொள்வது பற்றி நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு முடிவுசெய்யப்பட்டது

பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள், பீடங்களின் தலைவர்கள், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அதிகாரிகள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அதேசமயம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர) பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய மேலும் ஒரு தொகுதி மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

ஒவ்வொரு பீடத்துக்கும் சுமார் 9,000 மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

இந்தப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் நவம்பர் 22-ம் திகதி வரையில் அனுமதி கோரி விண்ணப்பிக்க முடியும்.

எதிர்வரும் 18-ம் திகதி முதல் அடுத்த மாதம் 19-ம் திகதி வரையில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1992-ம் ஆண்டு க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்தவர்களும், பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றவர்களும் இந்தக் கல்வி ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படவிருப்பதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (இ-வி)

---

## சர்வதேச நல்லொழுக்க தினம் ஐப்பசி — 3

மது விலக்கல், சமாதானம், சகோதரத்துவம் என்னும் உயர் ஒழுக்க பண்பாட்டு ரீதியின் அடிப்படையில் மது போதையற்ற சமாதான சகோதரத்துவமான ஜாதி, மத பேதமற்ற, ஒழுங்கான சுயமான வாழ்க்கையை நோக்கி ஒவ்வொருவரையும் முன்னேற்றும் முயற்சியே சர்வதேச நல்லொழுக்க அமைப்பின் இலட்சியமாகும்.

உலகளாவிய ரீதியில் அக்டோபர்-3 இத்தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டுவருகின்றது. இவ்வகையில் 53 நாடுகளின் இணைத்துவத்துடன் இயங்கிவரும் சர்வதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஒரு அங்கமாகிய வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனமும் இத்தினத்தில் அமைதியாக, உணர்வுபூர்வமான முறையில் வடபிரதேச மக்களின் நல்லொழுக்க விருத்திக்காக பிரார்த்திக்கும் வகையில் அக்டோபர்-3 இனை அமைதியாகக் கொண்டாடுகிறது.

வடபிராந்திய நல்லொழுக்க சம்மேளனம் ஆற்றும் பணிகள் அளப்பரியன. இத்துன்பச் சூழலில், மக்களின் நல்லொழுக்கம் கட்டாயம் பேணப்படுதல்வேண்டுமென்பதனை இத்தினத்தில் ஒரு அன்புக் குரலாக, அறைகூவலாக வெளியிட்டு தமிழ் மக்களின் ஒற்றுமையை பேணுவதில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் மகிழ்ச்சியடைகிறது. அத்துடன் இவ்வாண்டு செப்டெம்பர்-25 — அக்டோபர்-2 வரையான ஒருவார காலத்தை கொடிவாரமாக கொண்டாடியதோடு எமது கொள்கைகளை உள்ளடக்கிய தெருக்கூத்தும் நடாத்தப்பட்டது. எனவே இத்தினத்தில் மது, போதைப்பொருள் பாவனையற்ற நன்னேர் சமுதாயத்தைக் கட்டி எழுப்ப அனைவரும் திடசங்கற்பம் பூண்வோமாக.

"மதுவை ஒழித்திடுவோம்
மாந்தரை நாம் வாழவைப்போம்"

இவ்வண்ணம்
நெறியாளர் குழுவினர்
வ. ந. சம்மேளனம்
தொல்புரம் / சுழிபுரம்.

(இ-500)

---

## இராசிபலன்

03-10 1993
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு புரட்டாதி 17)

திருதியை முழுவதும்: அச்சுவினி ந. ப. 12 – 05 வரை, சித்தயோகம், இராகு காலம், மாலை 4-32 முதல் 6-02 வரை சுபநேரம் காலை 9-02 முதல் 10-32 வரை.

மேஷம்: காரிய சித்தி, அர்த்தலாபம், திறமைக்கும் பாராட்டு.

இடபம்: வேண்டாத தொல்லை, மனைவி துயர், அலைச்சல்.

(4-ம் பக்கம் பார்க்க)

---

புலோப்பளை வீரச்சமரில்
தன்னுயிரை ஈர்ந்த
மாவீரர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்
ஜெயா அழகுசாதன மாளிகை
177/A மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

புலோப்பளை வீரச்சமரில்
தன்னுயிரை ஈர்ந்த
மாவீரர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்
பகவான் மருந்தகம்
221. நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

புலோப்பளை வீரச்சமரில்
தன்னுயிரை ஈர்ந்த
மாவீரர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்
அண்ணா கோப்பி
யாழ்ப்பாணம், இணுவில்
திருநெல்வேலி சுன்னாகம்

புலோப்பளை வீரச்சமரில்
வீரமரணமடைந்த
மாவீரர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்
சுப்பஸோ
(வீடியோ. ஓடியோ சென்ரர்)
198/5. நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

புலோப்பளை வீரச்சமரில்
தன்னுயிரை ஈர்ந்த
மாவீரர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்
பரணி மருந்துச்சாலை
(வைத்தியசாலை முன்)
456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

புலோப்பளை வீரச்சமரில்
தன்னுயிரை ஈர்ந்த
மாவீரர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்
வைரமுத்து அன் சன்ஸ்
966, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தற்போது மேற்கொள்ளப் பட்டிருக்கும் "ஒபரேசன் யாழ்தேவி" இராணுவ நடவடிக்கையின்போது இடம் பெயர்ந்த மக்களின் நிவாரண சம்பந்தமாகவும், கொலரா நோய் தடுப்புச் சம்பந்தமாகவும் கலந்துரையாடல் ஒன்று யாழ். அரசாங்க அதிபரின் தலைமையில் செயலக மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இதற்குச் சகல நிறுவனங்களின் தலைவர்களும், பிரதேச செயலர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் தவறாது சமூகம் தருமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (இ)

### ★ இந்திய நிலநடுக்கம்:

# 12 ஆயிரம் சடலங்கள் மீட்பு ஒன்பதாயிரம் உடன் தகனம்!

(புதுடில்லி)

நிலநடுக்கம் ஏற்பட்ட மஹாராஷ்டிரா மாநிலத்தில் போர்க்கால அடிப்படையில் உதவிப்பணி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இவ்வேளை நேற்றுக் காலை இன்று சிறிது நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

முன்னெப்போதும் மேற்கொள்ளப்படாத விதத்தில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இராணுவம், துணை இராணுவம், பொலிசார் மற்றும் நகரசபை அதிகாரிகளும், தொண்டர் நிறுவனங்களும் இந்த உதவிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் 12ஆயிரம் சடலங்கள் வெளியே எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்பதாயிரம் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுத் தகனம் செய்யப்பட்டன.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குத் தேவையான உணவுப் பொருட்களும், மருந்துவகைகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கென தற்காலிக மருத்துவமனைகள் அந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. இ-சி

# சகோதரனின் மரணத் தகவலை கூறச்சென்றவர் சூட்டுக்குப்பலி

## - ஹெலித்தாக்குதல் கொடூரம் -

(நெல்லியடி)

"எனது தமையனின் மரணம் குறித்து கடை முதலாளிக்கு தெரிவித்துவிட்டு சைக்கிளில் என்னுடன் வந்தவரை ஹெலி தாக்கியதில் அவர் ஸ்தலத்திலேயே மரணமானார்."

இச்சம்பவம் நேற்றுமுன் தினம்மாலை 6 மணியளவில் வல்வெட்டித்துறை நல்லாயன் எதிரொருவிநிலையத்துக்கு முன்னால் இடம்பெற்றது.

இறந்த சிறுவனுடன் சயிக்கிளில் பயணம்செய்து காயங்களுடன் உயிர்தப்பி மந்திகை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருபவரான சாம்பசிவம் ஸ்ரீகுகன் வயது 15 இது பற்றி மேலும் கூறுகையில்;

மாணவர்களை வல்வெட்டித் துறையைச்சேர்ந்த எனது உறவினரான செல்வராசா சூரியகுமார் வயது 14) என்பவருடன் நான் சைக்கிளில் சென்று அவர் பணிபுரியும் எண்ணெய்க்கடைமுதலாளியிடம் புலோப்பளையில்வீரச்சாவடைந்த அவரது சகோதரனின் எட்டுச் செலவுகுறித்து அறிவித்துவிட்டு வீதியில்வந்து கொண்டிருந்தோம்.

அவ்வேளை ஹெலிகொப்டர் ஒன்று வானில் வட்டமிட்ட பின் ரொக்கட் தாக்குதலை மேற்கொண்டது. அச்சமயம் எனது சைக்கிளை செலுத்திச் சென்றவரான சூரியகுமாரின் தலையில் ரொக்கட் வெடித்தது. உடனே சைக்கிளுடன் ரோட்டில் வீழ்ந்த சில நிமிட நேரத்தில் அவர் உயிர் பிரிந்தது. பின்னர் என்னையும் அவருடன் வாகனத்தில் ஏற்றி மந்திகை வைத்தியசாலையில் அனுமதித்தனர் என்றார். (160-இ)

### வல்வெட்டித்துறையில்

## ஹெலி ரொக்கட் தாக்கு சிறுவன் பலி; ஐவர் காயம்

(நெல்லியடி)

வல்வெட்டித்துறையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஹெலிகொப்டர் தாக்குதலில் இரண்டு பாடசாலை மாணவிகள் உட்பட ஐவர் காயமடைந்தனர். ஒரு சிறுவன் ஸ்தலத்தில் பலியானார்.

வல்வெட்டித்துறை நடராஜ வீதி ராமசாமி சிவலிங்கம் (வயது 87), தெடிகைகாடு வல்வெட்டித்துறை சதாசிவம் (வயது 61), சாம்பசிவம் ஸ்ரீகுகன் (வயது 15), செல்வி இளையபெருமாள் லோகலட்சுமி (வயது 25) வல்வெட்டித்துறை, செல்வி இரத்தினலிங்கம் மதிவதனி (வயது 14) ஆகியோரே காயமுற்றவர்களாவர்.

செல்வராஜா சூரியகுமார் (வயது 15) என்னும் சிறுவனே மோட்டார் ஷெல் தாக்குதலில் ஸ்தலத்தில் மரணமானார். —160-இ-சி

### காங்கேசனில்

## உணவுப் பொருட்களுடன் இரு கப்பல்கள்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிக்கொண்டு வந்த இரு கப்பல்கள் கடந்த சில தினங்களாக காங்கேசன்துறைத் துறைமுகத்தில் தரித்து நிற்கின்றன.

தற்போது அமுல் படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவையடுத்தே இந்தக் கப்பல்கள் பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு வரவில்லையாம்.

இந்தக் கப்பல்களிலிருந்து உணவுப் பொருட்களைப் பருத்தித்துறைத் துறைமுகத்தில் வைத்து இறக்குவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளால் எடுக்கப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லையென்றும் தெரியவருகிறது. (162-இ)

## கண்ணீர் அஞ்சலி

திரு. வி. என். சிவராசா

யாழ். பல்கலைக்கழக முன்னாள் பதிவாளரும், வடக்கு—கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலரும், இந்து சமய விவகார திணைக்களத்தின் முதலாவது பணிப்பாளரும், நிதி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும், பொது நிர்வாக மாகாண உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவி ஆலோசகராகவும், இலங்கையின் நிர்வாக சேவையில் முதலாவது விசேட தர உத்தியோகத்தராகவும் கடமையாற்றியவரும் எங்களது பேரன்புக்கும், பெருமதிப்புக்குமுரியவருமாகிய திரு. வி. என். சிவராசா அவர்கள் காலமானதையிட்டு பல்கலைக்கழக சமூகம் ஆழ்ந்த கவலையும், அதிர்ச்சியும் அடைகிறது.

தகவல்:
ச. க. தனேந்திரன்
யாழ். பல்கலைக்கழகம்.

(இ-502

### கடைக்காடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் தங்கியுள்ளனர். இதனால் இப்பகுதியில் பதற்றம் நிலவுகின்றதாம்.

யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைக்காகவே மேற்படி இராணுவத் தளபாடங்கள் தொடர்ந்தும் இப்பகுதிகளினூடாக அனுப்பப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. —163-இ

### இலங்கைப் பிரச்னை

(4-ம் பக்கம் பார்க்க)

சபையில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர்மேலும் இங்கு உரையாற்றுகையில்; நாடாளுமன்றத் தெரிவுக்குழு அரசியல் தீர்வொன்றைக்காணும்முயற்சியில் ஈடுபட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உணவு, மருந்து விநியோகம் மற்றும் சுகாதாரம் போன்றவற்றை தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் கூறினார்.

அணுவாயுத பரம்பல் ஒழிப்பு நடவடிக்கையிலும் கைச்சாத்திடுவதற்கும் இலங்கை உறுதிபூண்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார். (இ)

### ஹெலி, ஷெல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வயது ஸ்தலத்திலே துடிதுடித்துப் பலியானார். இவரது மகளான ரி. தயாளினி (04வயது) உட்பட இதே குடும்பத்தைச் சேர்ந்த கே. லோகேஸ்வரன் ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை விடத்தற்பளையில் நேற்று நண்பகல் ஹெலிகொப்டர் நடத்திய தாக்குதலில் ஒரு சிறுவன் உயிரிழந்தான். உடலில் பல சன்னங்கள் பாய்ந்த நிலையில் இச்சிறுவனின் சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. நேற்றிரவுவரை இச்சடலம் அடையாளம் காணப்படவில்லை.
—155-157-158-இ-இ

### ஊரடங்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டமும் மறு அறிவித்தல் வரை நீடித்திருக்கும் என பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது.
—இ-இ

### இராசி பலன்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மிதுனம்: நற்கருமம், பெண் உதவி. வேலைக் கஸ்டம்.

கடகம்: அடியவர் சேர்க்கை, தொழில்சிறப்பு, தியாகம்.

சிங்கம்: குறிப்பறிதல். மன விரக்தி. தொழில் போட்டி.

கன்னி: குடும்ப தொல்லை. பணக்கஸ்டம், கருத்து மோதல்.

துலாம்: பிறர் உதவி. நோய்தணிவு, புதிய முயற்சி.

விருச்சிகம்: விருந்தினர் வருகை தொழில்லாபம் புகழ்.

தனுசு: தனிமை வாசம், தியாகம், குடும்பத்தில் சங்கடம்

மகரம்: சுற்றத்தார் கவலை, அதிகாரிகள் சினம், பயணத் தடை

கும்பம்: கல்விசிறப்பு, உல்லாச வாழ்வு, தாராள பெருமை.

மீனம்: வாக்குவாதம் கடன் பளு, புத்திரர் செலவு.

— ஜோஸ்யர்.

### அரசியல் தீர்வு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இனப்பிரச்னை இல்லையென்றால், எப்படி இது பயங்கரவாதப் பிரச்னையாக வந்தது? எல்லோருக்கும் தெரியும். நான் சொல்லத் தேவையில்லை. இனப்பிரச்னையை தீர்க்காதபடியால்தான் பயங்கரவாதப் பிரச்னையாக இது உருவெடுத்தது

அரசியல் தீர்வு காணுவோமானால் 2000 ஆம் ஆண்டு வருவதற்கு முன் 'தனித்தமிழ் ஈழத்தை' நாம் கொடுக்க வேண்டும். இல்லாது போனால் அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம் எனவும் கூறினார். (ம-இ)

### இராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரைச்சலுடன் இத்தொடர் அணியில் சென்றன கடந்த மாத நடுப்பகுதியில் இவ்வாறான பெரியதோர் வாகன தொடர் அணி மேற்படி முகாம்களுக்குச் சென்றிருந்தும் தெரிந்ததே. (163-இ)

### விமான தாக்கு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைப் பகுதியில் நேற்று நண்பகல் விமானத் தாக்குதல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. இக்குண்டு வீச்சில் இருவர் காயமடைந்ததாகவும் சில குண்டுகள் கடற்பகுதியில் வீழ்ந்ததாகவும் கூறப்படுகிறது. (இ)

### ஒபரேஷன் யாழ்தேவி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் [illegible] தெரிவித்தார்.

இப்பகுதியிலிருந்து முன்னேற முயன்ற படையினருக்கும் புலிகளுக்குமிடையில் நேற்று மோதல்கள் இடம் பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை படையினர் சாவகச்சேரிப் பகுதியை நோக்கி முன்னேறி வருவதாக இராணுவ வட்டாரங்கள் கூறியதாக இலங்கை வானொலி தெரிவித்தது. (சி)

### கிளாலி கூற்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படைத் தளமொன்றை விரைவில் அமைக்கவிருப்பதாகக் கூறியுள்ளதென பி. பி. ஸி. தெரிவித்தது.

எந்நேரமும் விடுதலைப் புலிகள் திருப்பித் தாக்கலாம் என்பதை கருத்திற்கொண்டு பார்த்தால் படையினர் கிளாலிப் பகுதியை தம்மிடமே தக்க வைத்துக் கொள்ள முடியுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் என பி.பி ஸி கூறியது.

இங்கு இடம்பெற்ற யுத்தத்தை இராணுவத்தின் அதிகளவு ஆள்பலமும் டாங்கிகளின் எண்ணிக்கையுமே தீர்மானித்ததாகவும் பி. பி. ஸி கூறியது. —இ

### கொடிகாமத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். தேவதாஸ் (13 வயது) வரணி, எஸ் செந்தூர் (18 வயது) எழுதுமட்டுவாள், த. மகேதாஸ் (46 வயது), எஸ். சிவராசா 35 வயது), இ. தேவி (46 வயது), எஸ். எஸ். வல்லிப்பிள்ளை (40 வயது), என். சோதிமலர் (38 வயது), கே. தவமலர் (57 வயது), வி. மகேம்மா (46 வயது இவர்கள் கொடிகாமத்தைச் சேர்ந்தவர்கள். எஸ். மோகனதி 26 வயது) ஆனைக்கோட்டை ஆகியோர் காயமடைந்தனர்

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் சாவகச்சேரி யாழ்ப்பாணம் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

155-157-158-இ-இ

### இலங்கை அரசு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் இராணுவத்தினர் புலிகளை வென்றுவிட்டார்கள் என்று கூறும் ஒருசில மாயைகளை ஏற்படுத்த முனைவுமே தவிர இனப்பிரச்னைக்கு இவர்களால் எவ்வித தீர்வையும் காண முடியாது.

ஒருபக்கத்தில் புலிகளை பயங்கரவாதம் எனக் கூறும் அரசு அவர்களைவிட மிக மோசமான பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள்.

யாழ்ப்பாண மக்களை அரசு சொல்லொணா கொடுமைகளுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாக்கி வருகிறது. இந்நிலையில் பயங்கரவாதத்தைப் பற்றி பேசுவதற்கு இந்த அரசாங்கத்திற்கு எதுவித யோக்கியதையும் கிடையாது.

புலிகள் அண்மையில் நடத்திய தாக்குதல்கள் இராணுவத்திற்கு பெரும் அவமானத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதனை மறைக்கவும் சிங்களவர்களின் வாக்குகளை அடுத்த தேர்தலில் பெறவுமே அரசு தற்போது பெரும் தாக்குதலை நடத்திவருகிறது இதன் உண்மைநிலை சிங்களவர்களுக்குத் தெரியும் என்றும் கூறினார். (இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 3 ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licenee Numbcr B/10 336/B: